## மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. V. செந்தில்பாலாஜி அவர்களின் அறிக்கை - 8.4.2013

''எடுத்த காரியம் யாவினும் வெற்றி'' என்பதற்கேற்ப காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்ததில் வெற்றி; இரட்டை டீசல் விலைக் கொள்கையை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் வெற்றி; மக்களுக்காகத் திட்டங்கள்; திட்டங்களுக்காக மக்கள் இல்லை என்ற அடிப்படையில் மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றுவதில் வெற்றி; புதிய தலைமைச் செயலகக் கட்டடத்தை பல்நோக்கு மருத்துவமனையாக மாற்றியதில் வெற்றி; தமிழர்களின் உரிமைகளை நிலைநாட்டுவதில் வெற்றி; முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் முடங்கிக் கிடந்த அரசு போக்குவரத்துக் கழகங்களை முன்நிறுத்தியதில் வெற்றி என அனைத்திலும் வெற்றியினை ஈட்டி வரும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு பெருகி வரும் மக்கள் ஆதரவினைக் கண்டு சகித்துக் கொள்ள முடியாமல், வயிற்றெரிச்சலில், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, மக்களை எப்படியாவது திசை திருப்ப வேண்டும் என்ற நப்பாசையில் தினம் தினம் கடிதம் என்ற பெயரில் கட்டுக்கதைகளை எழுதி வரும் தி.மு.க. தலைவர் கருணாநிதி, "தங்கள் தகுதியை வெளிப்படுத்துவார்களா?" என்ற தலைப்பில், உடன்பிறப்புகளுக்கு கடிதம் என்ற பெயரில் **3.4.2013** அன்று முரசொலியில் ஒரு கட்டுக் கதையை கட்டவிழ்த்துள்ளது சாத்தான் வேதம் ஓதுவதைப் போல் உள்ளது.

அந்தக் கட்டுக்கதையில், தனிப்பட்ட முறையில் என்மீது அபாண்டமாக கூறி இருக்கும் குற்றச்சாட்டுகளைப் பொறுத்த வரையில், அவற்றிற்கு உரிய பதில்களை நீதிமன்றத்திலும், பொதுமக்களிடத்திலும் நான் தக்கவாறு எடுத்துக் கூறியிருக்கிறேன் என்பதை கருணாநிதிக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரசு போக்குவரத்துக் கழகங்களில் GPS என்னும் புவி இருப்பிட முறைமையுடன் கூடிய மின்னணு பயணச் சீட்டுக் கருவிகள் வழங்கும் திட்டம் குறித்து 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகையில் வந்த செய்தியை பேரவைத் தலைவரின் அனுமதி பெறாமல் சட்டமன்றப் பேரவையில் பத்திரிகையைக் காட்டி பேச முயன்றார் ஸ்டாலின். அன்றைய தினம் இப்பிரச்சனை எடுத்துக் கொள்ளப்படாவிட்டாலும், இதில் உள்ள உண்மை நிலையை எடுத்துரைக்க வேண்டும் என்ற அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின் பேரில், அதற்கு அடுத்த நாளே இந்தப் பிரச்சனை சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்தச் சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது நடந்த விவாதத்திற்கு பதில் அளித்து பேசிய நான், கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சியில், சட்டமன்றப் பேரவையில் **27.7.2006** அன்று சட்டமன்ற உறுப்பினர் கூறிய குற்றச்சாட்டிற்கு பதில் அளித்த மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின், பத்திரிகையிலே வந்திருக்கக் கூடிய செய்தியை வைத்துக்கொண்டு இங்கே பேசிக் கொண்டிருக்கிறார். இது முறைதானா? அது அவைக் குறிப்பிலே இடம் பெறுவது முறைதானா? என்று கேட்டு அதை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வைத்தார்.

அதேபோல, **12.1.2011** அன்று சட்டமன்ற உறுப்பினர் எழுப்பிய குற்றச்சாட்டிற்கு, இதே மு.க. ஸ்டாலின், பத்திரிகைகளில் வரக்கூடிய செய்திகளை வைத்துக்கொண்டு பேசுவது

முறையல்ல, இதை ஏற்கமாட்டோம் என்று கூறி, அவைக் குறிப்பிலிருந்து நீக்கச் செய்தார்.

சட்டப்பேரவையில் மற்றவர்கள் குற்றச்சாட்டுகள் கூறியபோது, பத்திரிகைச் செய்தியை ஏற்க முடியாது, பத்திரிகைச் செய்தியை சட்டமன்றத்தில் கூறுவது அவை மரபுக்கு முரணானது என்று கூறி அவைக் குறிப்பில் ஏறிய வார்த்தைகளை அன்றைக்கு நீக்கச் செய்த மு.க.ஸ்டாலினுக்கு, இப்பொழுது மட்டும் பத்திரிகைச் செய்தியை வைத்து அவையில் குற்றம் சொல்வது தகுதியான செயல்தானா என்று தான் நான் கேட்டேன். இதில் எந்தத் தவறும் இல்லை.

அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு புவி இருப்பிட முறைமை கொண்ட மின்னணு பயணச் சீட்டு வழங்கும் முறையை செயல்படுத்துவது குறித்து, டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தி குறித்தும், அதன் தொடர்ச்சியாக, கருணாநிதி எழுப்பியுள்ள வினாக்கள் குறித்தும் 1.4.2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நான் அளித்த அறிக்கையை கருணாநிதி படித்தாலே போதும். உள்ளங்கை நெல்லிக் கனியாய் விளங்கிவிடும். இருப்பினும் “அரைத்த மாவையே அரைத்தது போல” என்ற பழமொழிக்கேற்ப மீண்டும் அதே புளுகுமூட்டையை அவிழ்த்து விட்டிருக்கிறார் கருணாநிதி. தூங்குபவரை எழுப்பலாம்; தூங்குபவரைப் போல நடிப்பவரை எழுப்ப முடியாது.

கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சியில், கொள்முதல் செய்யப்பட்ட மின்னணு பயணச் சீட்டுக் கருவிகள் வழங்கிய நிறுவனங்களுக்கு, ஒப்பந்தப் புள்ளிகள் சமர்ப்பிக்க முன் அனுபவம் இருக்க வேண்டும் என்றோ, நிகர சொத்து மதிப்பு இவ்வளவு வேண்டும் என்றோ, எந்த நிபந்தனையும் விதிக்கப்படவில்லை. உற்பத்தியாளர்களுக்கான சான்றிதழ் இருந்தால் மட்டுமே போதுமானது என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது. மேலும், GPS, GPRS வசதிகள் என புதிய தொழில் நுட்பத்துடன் கொள்முதல் செய்யப்படவும் இல்லை. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், ஒப்பந்தப் புள்ளிகளில் பங்கேற்பவருக்கு முன் அனுபவமோ, நிதி ஆதாரமோ, தகுதியோ இருக்கத் தேவையில்லை என்ற நிலைதான் இருந்தது.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இத்திட்டம் சிறப்பான முறையில் வெளிப்படையாக செயல்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் மின்னணு பயணச் சீட்டுக் கருவிகளை வழங்கும் நிறுவனங்கள் அனுபவம் பெற்றவையாகவும், நிதி ஆரோக்கியம் உள்ளதாகவும் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஒப்பந்தப் புள்ளி படிவத்தில் உரிய விதிமுறைகள் சேர்க்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி எல்காட் பொது மேலாளர் மற்றும் 5 அரசு போக்குவரத்துக் கழக உயர் அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஒப்பந்தப் புள்ளி ஆய்வுக் குழு (Tender Scrutiny Committee), நிதித்துறை அரசு இணைச் செயலாளர் மற்றும் 5 அரசுப் போக்குவரத்துத் துறை உயர் அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஒப்பந்தப் புள்ளி நிர்ணயக் குழு (Tender Award Committee) ஆகிய இரு குழுக்கள், முழுமையான தீவிர ஆய்வு மேற்கொண்ட பிறகே, ஒப்பந்தப் புள்ளி இறுதியாக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தப் புள்ளி, எப்படி விதிமுறைப்படி இறுதி செய்யப்பட்டது என்பதை கருணாநிதியின் கவனத்திற்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 9.5.2012 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110–ன் கீழ் இந்தப் புதிய திட்டம் அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து, இத்திட்டத்தை செயல்படுத்த 7.9.2012 அன்று ஒப்பந்தப் புள்ளி வெளியிடப்பட்டது. இத்திட்டத்திற்கென, 26.12.2012 அன்று நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். இதன் பின்னர், ஒப்பந்தப் புள்ளி சமர்ப்பிக்க நிர்ணயிக்கப்பட்ட இறுதி நாளான 24.1.2013 அன்றே ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, ஒப்பந்தப் புள்ளி ஆய்வுக் குழு (Tender Scrutiny Committee) ஒப்பந்த புள்ளி வழங்கிய நிறுவனங்களின் ஆவணங்களை முழுமையாக ஆய்வு செய்து, 26.2.2013 அன்று விலைப் புள்ளிகள் திறக்கப்பட்டன.

ஒப்பந்தப் புள்ளி இறுதி செய்திட குறைந்த விலைப் புள்ளி அளித்த நிறுவனத்தை, இன்னும் சற்று விலை குறைக்க வலியுறுத்தி ஒப்பந்தப் புள்ளி நிர்ணயக் குழு (Tender Award Committee) 27.2.2013 அன்று கூட்டம் நடத்தியது.

இதன்படி குறைக்கப்பட்ட விலை முடிவு செய்யப்பட்டு, ஒப்பந்தப் புள்ளி இறுதி செய்யப்பட்டு 28.2.2013 அன்று ஒப்புதல் கடிதம் வழங்கப்பட்டது.

புவி இருப்பிட முறைமை வசதி கொண்ட கையடக்க இயந்திரங்களைப் பயன்படுத்தி மின்னணுப் பயணச் சீட்டு வழங்குவதில் – மின்னணு இயந்திரங்களை வழங்குதல், அதற்குரிய கணினி மென்பொருள் மற்றும் வன்பொருள் (Computer software and Hardware) வழங்குதல், கணினித் தொழில் நுட்பவழி செயல்படுத்துதல் ஆகிய பணிகளும் அடங்கும்.

இத்துறைகளில் நிபுணத்துவம் பெற்ற இரண்டு அல்லது மூன்று நிறுவனங்கள் ஒரு Consortium – கூட்டுக் குழுமமாக ஒருங்கிணைந்து, தங்களுக்குள் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டு, ஒப்பந்தப் புள்ளிகளை சமர்ப்பிக்கின்றன. இதன்படி,

1. சென்னை லிங்க் வெல் டெலிசிஸ்டம்ஸ் நிறுவனத்தை முதன்மை நிறுவனமாகவும் பெரி சாப்ட்வேர் சொல்யூஷன்ஸ் மற்றும் மும்பை ஓரியண்ட் டெக்னாலஜிஸ் நிறுவனங்களை துணை நிறுவனங்களாகவும் கொண்டு ஒரு கூட்டுக் குழுமம்,

2. ஹைதராபாத் வின்டேட்டா நிறுவனத்தை முதன்மை நிறுவனமாகவும் பெங்களூரு மைக்ரோ எப்எக்ஸ் நிறுவனத்தை துணை நிறுவனமாகவும் கொண்டு ஒரு கூட்டுக் குழுமம்,

3. ஹைதராபாத் இன்ஜெனரி டெக்னாலஜிஸ் சொல்யூஷன்ஸ் நிறுவனத்தை முதன்மை நிறுவனமாகவும் அபிபஸ் சர்வீசஸ் இந்தியா மற்றும் அனலாஜிஸ் டெக் இந்தியா நிறுவனங்களை துணை நிறுவனங்களாகவும் கொண்டு ஒரு கூட்டுக் குழுமம்,

4. மும்பை டிரைமெக்ஸ் இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் மற்றும் சர்வீசஸ் நிறுவனத்தை முதன்மை நிறுவனமாகவும் பெங்களூரு குவாண்டம் பவர் சிஸ்டம் நிறுவனத்தை துணை நிறுவனமாகவும் கொண்டு ஒரு கூட்டுக் குழுமம்,

ஆகிய 4 கூட்டுக் குழுமங்கள், அதாவது Consortiums தங்களது ஒப்பந்தப் புள்ளிகளை சமர்ப்பித்தன.

கருணாநிதி, “இந்த கம்பெனி என்றைக்கு தொடங்கப்பட்டது? எப்போது டெண்டர் கொடுக்கப்பட்டது? டெண்டர் நிபந்தனையாக மூன்றாண்டுகள் அனுபவம் வேண்டும்

என்று சொல்லி இருக்கிறார்களே அது ஏன் புறக்கணிக்கப்பட்டது? ஏதோ ஒரு பெயரில் இந்த நிறுவனம் இயங்கி வந்தது என்றால் அந்த நிறுவனத்தின் பெயரால் டெண்டர் கோரி இருக்க வேண்டியதுதானே? ஏன் அரசின் நிபந்தனை தளர்த்தப்பட்டது?'' என்று பல கேள்விகளை அடுக்கியிருக்கிறார்.

ஒப்பந்தப் புள்ளி விதி எண். 2.2.6–ன்படி, கூட்டுக் குழுமத்தின் முதன்மை நிறுவனமும் அதன் துணை நிறுவனமும் 30.6.2012 அன்றைய நாளில் குறைந்தபட்சம் மூன்றாண்டுகள் அனுபவம் கொண்டதாக இருக்க வேண்டும்.

10.1.2005–அன்று பதிவு செய்யப்பட்ட எர்ரம் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு வருமானவரித் துறையினரால் AAACY 2368L என்னும் நிரந்தர கணக்கு (PAN CARD) எண் வழங்கப்பட்டது. பின்னர், இந்நிறுவனம், மேங்கோ ஹெல்த் கேர் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டபோதும், தற்போது இன்ஜெனரி டெக்னாலஜிஸ் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் என்று பெயர் மாற்றப்பட்ட பிறகும் அதே வருமான வரி நிரந்தர கணக்கு எண், அதாவது AAACY 2368L என்ற எண் தான் தொடர்கிறது.

2ஜி அலைக்கற்றை உரிமத்தை தொலைதொடர்புத் துறையில் அனுபவமே இல்லாத கட்டுமான நிறுவனங்களுக்கு அளிக்கச் செய்து அதன் மூலம் மத்திய அரசின் கஜானாவை காலியாகச் செய்து, தன் குடும்ப கஜானாவைப் பெருக்கிக் கொண்ட தி.மு.க. தலைவர் கருணாநிதி, அனுபவம் புறக்கணிக்கப்பட்டதாக கருணாநிதி கூறியிருப்பது நகைப்புக்குரியதாக உள்ளது.

இன்ஜெனரி டெக்னாலஜிஸ் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் அனுபவம் 7 ஆண்டுகள் ஐந்து மாதம் என டெண்டர் ஆய்வுக் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, டெண்டர் நிபந்தனையாக மூன்றாண்டுகள் அனுபவம் வேண்டும் என்பது மீறப்படவில்லை. டெண்டர் படிவம் அரசு இணையதளத்தில் வெளியிடப்பட்ட நாள் 7.9.2012 ஆகும். எனவே, டெண்டர் நிபந்தனை தளர்த்தப்பட்டது என்ற கேள்விக்கே இடமில்லை.

அரசுக்கு வழங்கப்படும் மின்னணு பயணச் சீட்டுக் கருவிகள் தரம் உடையதாக இருக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன், அக்கருவிகளை தயாரித்து வழங்கும் நிறுவனங்கள், இந்தியாவில் உள்ள இதர போக்குவரத்து நிறுவனங்களுக்கோ அல்லது அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கோ ஒரு திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் 100 மின்னணுப் பயணச் சீட்டுக் கருவிகள் வழங்கி இருக்க வேண்டும் என்றும், அல்லது 2000 மின்னணு கணக்கீட்டுக் கருவிகள் வழங்கி இருக்க வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டது. இன்ஜெனரீஸ் டெக்னாலஜீஸ் சொல்யூஷன்ஸ் நிறுவனத்தை முதன்மை நிறுவனமாக கொண்டுள்ள கூட்டுக் குழுமத்தின் துணை நிறுவனமாக ஹைதராபாத் அனலாஜிக்ஸ் டெக் இந்தியா நிறுவனம் இதுவரை ஆந்திரா, குஜராத், பஞ்சாப், ராஜஸ்தான் மாநிலங்களின் போக்குவரத்துக் கழகங்களுக்கு மொத்தம் 9,732 மின்னணு பயணச் சீட்டு கருவிகள் வழங்கியுள்ளது.

இன்ஜெனரி டெக்னாலஜிஸ் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத் நிறுவனத்தின் பங்குதாரர்கள், ஹைதராபாத்தில் உள்ள மத்திய அரசின் கம்பெனி பதிவாளருக்கு தங்கள் நிறுவனத்தின் பெயர் மாற்றப் பதிவிற்காக 6.1.2013 அன்று விண்ணப்பித்துள்ளார்கள். 10.1.2013 அன்று நடைபெற்ற இந்நிறுவன பங்குதாரர்கள் வருடாந்திர கூடுதல் சாதாரண பொதுக்கூட்டத்தில் (Extraordinary General Meeting) இது தொடர்பாக ஒப்புதல் பெற்றுள்ளனர். 11.1.2013 அன்று பெயர் மாற்ற தடையில்லை

என்று கம்பெனி பதிவாளரால் தடையில்லாச் சான்று வழங்கப்பட்டு **24.1.2013** அன்று இன்ஜெனரி டெக்னாலஜிஸ் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத் என்ற பெயரில் பதிவாளரால் பதிவுச் சான்று வழங்கப்பட்டுள்ளது.

இதேபோல, இந்த டெண்டரில் பங்குபெற்ற ஏனைய கூட்டுக் குழுமங்களில் உள்ள பல நிறுவனங்களும் தங்களது பெயரை அவ்வப்போது மாற்றம் செய்துக்கொண்டுள்ளன.

திருவாளர் லிங்க் வெல் டெலி சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத் நிறுவனம், **15.6.93–ல்** பதிவு செய்யப்பட்டது. இந்நிறுவனம் **30.6.1998** அன்று பிரைவேட் என்ற வார்த்தையை நீக்கம் செய்து பெயர் மாற்றம் செய்துள்ளது. இதே நிறுவனம் மீண்டும் **30.7.2009** அன்று பிரைவேட் லிமிடெட் ஆக பெயர் மாற்றம் பெற்றுள்ளது. அதேபோல, டிரைமாக்ஸ் ஐடி இன்ப்ராஸ்ரெக்சர்ஸ் & சர்வீசஸ் லிமிடெட், மும்பை நிறுவனம், **18.8.1995** அன்று திருவாளர் டிரைமாக்ஸ் கம்ப்யூட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் என்று பதிவு செய்யப்பட்டது. **30.3.2005** அன்று திருவாளர்கள் டிரைமாக்ஸ் கம்ப்யூட்டர்ஸ் லிமிடெட் என பெயர் மாற்றம் பெற்றுள்ளது. **21.4.2008** அன்று டிரைமாக்ஸ் ஐடி இன்ப்ராஸ்ரெக்சர்ஸ் & சர்வீசஸ் லிமிடெட் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் பெரிய குழுமங்கள் தங்களது பெயர்களை மாற்றிக்கொள்வது ஒரு பொதுவான நிகழ்வுதான். எடுத்துக்காட்டாக இந்துஸ்தான் லீவர் லிமிடெட் நிறுவனம் தனது பெயரை இந்துஸ்தான் யூனிலீவர் என்று மாற்றிக்கொண்டது. அதேபோல, IBM (International Business Machines) என்ற புகழ்மிக்க கம்ப்யூட்டர் நிறுவனம், இதற்கு முன்னர் Computing Tabulating Recording Corporation என்ற பெயரில் இருந்தது. அதேபோல, ஆண்டர்சன் கன்ஸல்ட்டிங் என்ற பெயருடன் இருந்த குழுமம் அக்சஞ்சர் (Accenture) என்று பெயர் மாற்றிக் கொண்டுள்ளது. UTI வங்கி என்ற பெயரில் இருந்த வங்கிதான் தற்போது Axis வங்கி என்று பெயர் மாற்றப்பட்டு தொடர்ந்து இயங்கி வருகிறது.

மேலும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் துவங்கப்பட்ட நாளில் இருந்து இதுவரை மூன்றுமுறை பெயர் மாற்றம் செய்யப்பட்டு தற்போது தொடர்ந்து செயல்பட்டுகொண்டு வருகின்றன. உதாரணமாக கும்பகோணத்தை தலைமையிடமாகக் கொண்டு இயக்கப்பட்ட அப்போதைய சோழன் போக்குவரத்துக் கழகம் பின்னர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (கும்பகோணம் கோட்டம்–I), கும்பகோணம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு மீண்டும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு தொடர்ந்து இயங்கி வருகிறது.

இதுபோல, ஏறத்தாழ **1400–க்கும்** மேற்பட்ட நிறுவனங்கள் தங்களது பழைய பெயரை மாற்றி புதுப் பெயரை வைத்துக்கொண்டுள்ளன. எனவே, பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் பெயர் மாற்றம் செய்யப்பட்டு இயங்கி வருவது சட்டத்திற்கு உட்பட்ட நடைமுறையாகும்.

இந்தக் குழுமங்கள் தங்களின் பெயர்களை மாற்றிக்கொண்டாலும், அடிப்படையான அனுபவம், வருமான வரித்துறையுடனான தொடர்புகள், மத்திய விற்பனை வரித் தொடர்புகள் ஆகியவை மாற்றம் பெறாது. பெயர் மாற்றத்திற்கு முன்பு இருந்த பழைய கணக்கு எண் முதலானவையே பெயர் மாற்றத்திற்குப் பின்னும் தொடரும்.

மேலும் அந்தக் கட்டுரையில், டெண்டர் தாக்கல் செய்ய, **25** கோடி ரூபாய்க்கான சொத்து உடையவர்களாக இருக்க வேண்டும் என்றும், ஆனால், அந்த கம்பெனியின்

சொத்து 8 லட்சத்திற்கும் குறைவு என்று ஆவணங்கள் கூறுவதாகவும் குறிப்பிட்டுள்ளார் கருணாநிதி.

ஒப்பந்தப் புள்ளி விதி 2.2.8.a–ன்படி, ஒப்பந்தப் புள்ளிகள் சமர்ப்பிக்கும் கூட்டுக் குழும நிறுவனங்களின் நிகர சொத்து மதிப்பு 25 கோடி ரூபாயாகவும், அதில் முதன்மை நிறுவனத்தின் சொத்து மதிப்பு குறைந்தபட்சம் 60 விழுக்காடாகவும், அதன் துணை நிறுவனங்களின் சொத்து மதிப்பு குறைந்தபட்சம் 20 விழுக்காடாகவும் இருக்க வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளி வழங்கிய இன்ஜெனரி டெக்னாலஜிஸ் சொல்யூஷன்ஸ் நிறுவனம், நிகர சொத்து மதிப்பான 25 கோடி ரூபாயில், 60 விழுக்காடான 15 கோடி ரூபாய்க்கு பதிலாக 15.03 கோடி ரூபாய் சொத்து மதிப்பும், கூட்டுக் குழுமத்தில் உள்ள ஒரு துணை நிறுவனமான அபிபஸ், 20 விழுக்காடான 5 கோடி ரூபாய்க்கு பதிலாக, 20.10 கோடி ரூபாய் சொத்து மதிப்பும், கூட்டுக் குழுமத்தில் உள்ள மற்றொரு துணை நிறுவனமான அனலாஜிக்ஸ் டெக் இந்தியா நிறுவனம் அதே 20 விழுக்காடான 5 கோடி ரூபாய்க்கு பதிலாக 20.05 கோடி ரூபாய் சொத்து மதிப்பும் கொண்டுள்ளன. ஆக, ஒப்பந்தப்புள்ளி படிவத்தின்படி கூட்டுக் குழும நிறுவனங்களின் நிகர சொத்து மதிப்பு 25 கோடி ரூபாய் இருக்க வேண்டும் என்பதற்கு பதிலாக 55.18 கோடி ரூபாய் நிகர சொத்து மதிப்பை ஒப்பந்தப் புள்ளி இறுதி செய்யப்பட்ட நிறுவனங்கள் கொண்டுள்ளன. இதற்கான அதிகாரப்பூர்வ சான்றிதழ்களை அவை வழங்கியுள்ளன.

மேலும், கருணாநிதி 'இந்தக் கம்பெனி இணைத்து அனுப்பியுள்ள பல ஆவணங்கள் கையினால் எழுதப்பட்டுள்ளதாம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒப்பந்தப்புள்ளி விதி எண். 2.18.5–ன்படி, ஒப்பந்தப்புள்ளி முன்மொழிவும் மற்றும் அதன் பிரதியும் நிலையான மையினால் தட்டச்சு செய்யப்பட்டதாகவோ அல்லது அச்சடிக்கப்பட்டதாகவோ இருக்க வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்ட நிறுவனத்தால் அனைத்து ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களும் அச்சடித்தும், தட்டச்சு செய்யப்பட்டும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பதை கருணாநிதிக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரசு தற்போது டெண்டர் அளித்துள்ள குழுமத்தின் மூன்று உறுப்பினர்களில் இரண்டு பேர் கறுப்புப் பட்டியலிலே இடம் பெற்றவர்கள் என்ற கருத்தும் உண்மைக்கு மாறானதாகும்.

கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சியில் GPS, GPRS என எந்த வசதியும் இல்லாமல், கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரிய 9 நிறுவனங்களில் தங்களுக்கு வேண்டிய, தாங்கள் விரும்பிய 3 நிறுவனங்கள் போக எஞ்சிய 6 நிறுவனங்களை நிராகரித்தது போல இல்லாமல், நவீன முறையுடன், விஞ்ஞான வளர்ச்சியுடன் போக்குவரத்துப் பணியாளர்களின் வேலையை எளிதாக்கி, பொதுமக்களுக்கு வசதி அளிக்கும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டத்தினை எந்த ஒரு ஆதாரமும் இன்றி, வாய் ஜாலமும், வார்த்தை ஜாலமும் காட்டி, காகிதப்பூ கதை எழுதியதுபோல இட்டுக்கட்டி குறை கூறுவதையும், குற்றம் சொல்வதையும் தமிழக மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

கருணாநிதி என்றாலே ஆட்சியில் இருக்கும்போது ஒரு முகம், ஆட்சியில் இல்லாதபோது ஒரு முகம்! ஆட்சி அதிகாரத்தில் இருக்கும்போது தன் குடும்ப உறுப்பினர்களுக்கு வளம் கொழிக்கும் பதவிகளை அளித்து, பெற்றுத் தந்து அதன்மூலம்

தனது குடும்ப கஜானாவை நிரப்பிக் கொள்வதில் குறிக்கோள். ஆட்சி அதிகாரத்தில் இல்லாதபோது, தமிழர்களுக்காக உருகுவது போல் கபடநாடகமாடுவதில் குறிக்கோள். மொத்தத்தில், ஆட்சியில் இருந்தாலும், ஆட்சியில் இல்லாவிட்டாலும், தமிழகத்திற்கும், தமிழக மக்களுக்கும் துரோகம் செய்கிற முகம்! அதற்கு உதாரணம் 'டெசோ' என்ற பெயரில் கபட நாடகம்!

அரசு போக்குவரத்துக் கழகங்களில் GPS என்னும் புவி இருப்பிட முறைமையுடன் கூடிய மின்னணு பயணச் சீட்டுக் கருவிகள் வழங்கும் திட்டத்தில் எந்த விதிமுறை மீறலும் இல்லை, எந்த விதிமுறை தளர்வும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டி, 2ஜி ஸ்பெக்ட்ரம் உலக மகா ஊழலில், தனது குடும்பத் தொலைக்காட்சிக்கு அளிக்கப்பட்ட 200 கோடி ரூபாய் பணப் பரிமாற்றம், நீரா ராடியா – ராசாத்தி அம்மாள், நீரா ராடியா – கனிமொழி ஆகியோரின் தொலைபேசி உரையாடல்கள் குறித்த செய்திக்கு பதில் அளித்து தனது "தகுதி" யை கருணாநிதி நிரூபிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

V. செந்தில்பாலாஜி
போக்குவரத்துத் துறை அமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**